19th August 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM : அதை எழுத முடியாதவர்கள், "திரு" என்று எழுதுகிறார்கள். சர்க்கார் காரியாலயங்களில் உள்ளவர்களுக்கு அதை எழுதத்தெரியும். தெரிந்தவர்களும் "திரு" என்று போடலாம்; தடை ஒன்றுமில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இந்த வார்த்தைகளை உபயோகிக்கும் முறையிலே, "திரு" என்பதை "ஸ்ரீ" என்பதற்குப் பதிலாகப் போட வேண்டும் என்று சொல்கிறவர்கள், அதே முறையில், தங்கள் பெயர்களில் வரும் எழுத்தையும்—சிலர் அப்படி வைத்திருக்கிறார்கள் இன்னமும்—மாற்ற, அதற்கும் அரசாங்கம் திட்டம் போடுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்டவர்களின் உரிமையைப் பாதிக்கக் கூடியதைச் செய்ய முடியாது; பொதுக் காரியங்களில் எப்படி உபயோகிக்க வேண்டும் என்றுதான் நாம் செய்ய முடியும்.

MR. SPEAKER : Questions are over.

[*Note*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. CALLING ATTENTION TO THE LOCK-OUT IN THE SUN BEEDI FACTORY, JALARPET.

MR. SPEAKER : I have received notice under rule 41 from Sri V. K. Kothandaraman calling the attention of the hon. Minister for Industries to a matter of urgent public importance.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I beg to call the attention of the Hon. the Minister for Industries to a matter of urgent public importance, viz., lock-out by the management of the Sun Beedi Factory, Jalarpet, North Arcot district.

ஸார், சமீபத்தில் பீடித் தொழிலாளர்களுக்கு வேண்டிய பாதுகாப்புச் சட்டமும், அது போன்று குறைந்த பட்சக் கூலிச் சட்டமும் வந்திருந்தும்கூட இன்றைய தினம் முதலாளிகளால் கதவடைப்பு செய்யப்படுகிறது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், முதலாளிகளுடைய பிரதிநிதிகளையும் அழைத்து ஒரு ஒப்பந்தம் செய்ததற்குப் பிறகு மீண்டும் இன்றைக்கு இந்த மாநிலத்தில் பல இடங்களில் முதலாளிகள் கதவடைப்பு செய்து தொழிலாளர்களை வேலை இல்லாத நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது இன்றைக்கு சர்க்காருக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். இது போன்றுதான் இந்த மாதம் மூன்றாம் தேதி முதற்கொண்டு ஜோலார்பேட்டை ஸன் பாக்டரி பீடித் தொழில் முதலாளி கதவடைப்பு செய்திருக்கிறார்கள். அதன் விளைவாக சுமார் 1,500 தொழிலாளர்கள் வேலை இழந்து அவர்களுடைய குடும்பங்கள் பட்டினியாக இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலைமை இப்பொழுது அங்கே ஏற்பட்டிருக்கிறது. குறைந்த கூலிக்கு அவர்கள் வேலை செய்ய வேண்டும் என்பதுதான் இந்தக் கதவடைப்பின்

[Sri V. K. Kothandaraman] [19th August 1960

ஒரே நோக்கம். ஆகவே இன்றைக்கு அவர்களுடைய நோக்கமெல்லாம் எப்படியாவது குறைந்த கூலிக்கு அவர்களைப் பணிய வைக்கவேண்டும், அந்த முறையில் அவர்களிடமிருந்து வேலை வாங்க வேண்டும் என்பது தான். அது காரணமாக இருப்பதால் இதைப்பற்றி உடனடியாகப் பரிசீலனை செய்து இதற்குப் பரிகாரம் தேடுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதற்காக வேண்டித்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் கனம் அமைச்சர் அவர்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டு வரும் முறையில் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்கிற முறையில் அதிகாரிகளின் மூலமாக இதில் தீவிர கவனம் செலுத்தி இதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the 24th July 1960, the North Arcot District Beedi Workers' Union represented to the Labour Officer, Vellore, that the management of Sun Beedi Factory had locked out about 30 branches of the factory with effect from 22nd July 1960, throwing out of employment about 1,500 workers without any notice.

The Labour Officer, Vellore, who contacted the proprietor has reported that prior to 11th July 1960, the proprietor was paying Rs. 1-6-0 for 1,000 Jadi beedies and two annas as commission to the agent. Under the settlement dated 11th July 1960 reached between the representatives of the employers and employees of the Beedi Industry the rate of wages for Jadi beedi was revised as Rs. 1.69 for 1,000 beedies. The proprietor was accordingly paying this rate of Rs. 1.69 as well as annas two as commission to the agents. From the first week of August, however, the proprietor discontinued the commission with the result that the agents refused to take raw materials for distribution to the workers, and the workers were thrown out of employment.

The Labour Officer has been instructed to persuade the proprietor to pay wages as per the settlement and also the commission to the agents or in the alternative to employ the workers directly under him and pay wages as per the settlement. The Madras Provincial Beedi Factory Owners Association and the North Arcot District Beedi and Tobacco Merchants Association have also been requested to advise their member beedi factory owners to pay wages according to the settlement, dated 11th July 1960 and to continue to pay the commission to the agents. I may add that the Government are taking every step in this behalf.

III.—NON-OFFICIAL BUSINESS.

MR. SPEAKER : To-day we have non-official business. We shall take up Bills. The first Bill on the agenda is the Madras 'Swayamariyathai' Marriages Validation Bill, 1959 (L.A. Bill No. 30 of 1959).